நாள். 16.02.2024

I.A.No. 08/2023 in

OS. No. 91/2011

நீ.மா.சா.1

திரு. முல்லைவேந்தன், வழக்கறிஞர், பென்னாகரம்

த/பெ. சுந்தரம்

சத்தியப்பிரமாணம் பெறப்பட்டது.

**மனுதாரர் தரப்பில் முதல் விசாரணையின் தொடர்ச்சி**

1. பிரச்சனைக்குரிய ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு தரப்பினருக்கு அறிவிப்பு ஏதேனும் கொடுத்தேனா என்றால் 30.07.2019 ம் தேதியிட்ட மெமோ மூலமாக இருதரப்பு வழக்கறிஞருக்கும் அறிவிப்பு கொடுத்தேன். அந்த அறிவிப்பினை பெற்றுக்கொண்டு ஒப்புகை செய்து கொடுத்துள்ளார்கள், அத்துடன் தங்களிடம் பிரச்சனைக்குரிய ஆவணம் இல்லை என்று வழக்கறிஞர் தெரிவித்தார்கள். மேற்படி மொமோவினை 31.07.2019 ம் தேதியில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் 31.07.2019 ம் தேதியிட்ட மெமோவில் பிரச்சனைக்குரிய கிரைய ஆவணத்தையும், பிழைத்திருத்தல் பத்திரத்தையும் ஒப்படைக்க செய்யுமாறு கோரியுள்ளேன். மேற்படி மெமோவில் தரப்பினருக்கு தகவல் கொடுத்தாக சொல்லவில்லை என்றால் தரப்பினர்கள் சார்பாக தரப்பினரின் வழக்கறிஞருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டதாகவும் சாட்சி கூறுகிறார்.

2. அதற்கு பின்னிட்டு இ.மா.எண். 117/2019 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி பென்னாகரம் சார்பதிவாளருக்கு அறிவிப்பு அனுப்பி பிரச்சனைக்குரிய ஆவணம் அடங்கிய கோப்பினை கொண்டுவருமாறு நீதிமன்றத்தில் படி மெமோ செலுத்தி கோரியுள்ளேன். சார்பதிவகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ஆவணங்களை என்னிடம் ஒப்படைக்கவில்லை. திறந்த நீதிமன்றத்தில் சார்பதிவகத்தில் பணிபுரியும் அலுவலரால் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி ஆவணங்களை என்னிடம் நேரடியாக ஒப்படைக்க கோராமல் நீதிமன்றத்தில் ஒப்படைக்க கோரியதன் காரணம் என்ன மேறப்டி ஆவணம் பொது ஆவணம் என்பதால் நீதிமன்றத்தின் மூலமாக பெறுவது தான் சரியான வழிமுறை என்று கருதினேன். சார்பதிவகதில் ஆவணங்களை கோருவதற்கு முன்பாக நீதிமன்ற அனுமதி கோரி மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில்

பெறப்பட்ட ஆவணங்களை நான் பெறுவதற்கு எந்த வழிமுறையை கைப்பற்றினேன் என்றால் நீதிமன்றத்தில் கடித தொடர்பு வாயிலாக despatch போட்டு கொடுத்ததை நான் அப்படியே கைரேகை நிபுணர் அலுவலகத்தில் ஒப்படைத்தேன்.

3. 27.08.2022 ம் தேதியிட்ட ந.க.எண். 1646/2022 தேதியிட்ட பிரச்சனைக்குரிய ஆவணமும் வாதியின் கையொப்பம் அடங்கிய ஆவணமும் despatch போட்டு உறையிடப்பட்டு சீல் வைத்து என்னிடம் கொடுக்கப்பட்டது. நான் பிரச்சனைக்குரிய ஆவணம் எதையும் நீதிமன்றத்திலிருந்து தனிப்பட்ட முறையில் எந்த ஆவணத்தையும் பெறவில்லை. 27.08.2022 ம் தேதியிட்ட தடய அறிவியல் நிபுணர்க்கு எழுதப்பட்ட கடிதம் **நீ.மா.தா.சா.ஆ.9** ஆகும். நீ.மா.தா.சா.ஆ.9 ஆவணத்தின் கீழான சீலிடப்பட்ட உறையை நீ.ம.சா.ஆ.1 வாரண்டில் கண்டுள்ள வழிமுறைப்படி கைரேகை நிபுணர் அலுவலகத்தில் ஒப்படைத்தாக சாட்சி கூறுகிறார்.

4. ஒப்புக்கொள்ளப்பட்ட கைரேகையை வாதியிடம் பெறுவதற்கு முன்பாக 26.09.2019 ம் தேதியில் அறிவிப்பு ஒன்றினை அனுப்பி 27.09.2019 ம் தேதி காலை 10.30 மணிக்கு எதிர்மனுதாரர்/வாதியின் கைரேகை திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யுமாறு கோரிய போது வாதி தரப்பில் மனு தாக்கல் செய்து வாதி உடல்சுகம் கெட்டு படுத்த படுக்கையாக இருந்து எங்கும் செல்ல இயலாம் இருப்பதாக 30.10.2019 ம் தேதியில் மெமோ தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி மெமோவில் பிறப்பிக்கப்பட்ட நீ.ம.சா.ஆ.8 உத்தரவின் படி வாதியின் வீட்டிற்கு சென்று வாதியின் கைரேகை பெற்று வந்ததாக சாட்சி கூறுகிறார்.

5. நீ.ம.சா.ஆ.8ல் கண்ட மெமோவானது நான் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டதற்கு பின்னிட்டு தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு எனில் நீ.ம.சா.ஆ.1 வாரண்டிற்கு பின்னிட்டு எழுத்து மூலமான வாரண்ட் வழங்கப்பட்டதா? என்றால் இல்லை. மெமோவில் கண்ட உத்தரவின் அடிப்படையில் நான் செயல்பட்டேன். வாதியின் வீட்டிற்கு சென்று கைரேகை பெற்றுவரவேண்டி எழுத்துபூர்வமான Warrant வழங்கப்பட்டதா? என்றால் இல்லை. அதற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர் தரப்பினர்களுக்கும், அவரது தரப்பினர்களுக்கும் அறிவிப்பு அனுப்பியதற்கு பின்னிட்டு தான் வாதியின் வீட்டிற்கு சென்று வாதியின் கைரேகை பெற்றதாக கூறுகிறார்.

6. வாதியிடம் கைரேகை பெறுவதற்கு முன்பாக தரப்பினர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் பதிவு தபால் மூலமாக அறிவிப்பு அனுப்பி ஒப்புகை பெற்றதாக சாட்சி கூறுகிறார். 25.02.2020 ம் தேதியிட்ட வழக்கறிஞர் ஆணையர் கொடுத்த அறிவிப்பு **நீ.ம.சா.ஆ. 10** ஆகும். நீ.ம.சா.ஆ.10 அறிவிப்பின் படி நான் வாதியின் வீட்டிற்கு சென்ற பின்னிட்டு Spot Notice கொடுக்கப்பட்டதா? என்றால் கைரேகை பதிவு செய்யும்போது இருந்த சாட்சிகளிடம் கைரேகை எடுத்தற்கு பின்னிட்டு சாட்சி கையொப்பம் பெற்றதாக சாட்சி கூறுகிறார். பொதுசாட்சிகளான VAO, அவரது உதவியாளர்களை முன்னிலையில் வாதியிடம் கைரேகை பெற்றேனா என்றால் இல்லை. சாட்சி ஆவணங்கள் பார்வையிட்டு மனோகரன் த/பெ. பழனிசாமி, முத்து த/பெ. சின்னப்பன் ஆகிய இருவரும் கைரேகை பதிவு செய்த சமயத்தில் சாட்சிகளாக இருந்ததாக சாட்சி கூறுகிறார்.

7. நான் வாதியின் வீட்டிற்கு கைரேகை எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. மூன்றாம் தரப்பினரிடம் கைரேகை பெற்று வந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட கைரேகை நிபுணர் ஆய்விற்கு அனுப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு வழங்கப்பட்ட ஆணையர் வாரண்டிற்கு மாறுதலாக நான் செயல்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. கைரேகை பெற்றுவந்த ஆவணத்தை மெமோ மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துவிட்டேன். சார்பதிவகதில் இருந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிரச்சனைக்குரிய கைரேகையையும், நான் வாதியிடமிருந்து பெற்று வந்து கொடுத்த கைரேகையையும் நீதிமன்றத்தில் சீல் செய்யப்பட்ட கவரில் ஒப்படைத்ததை தான் நான் கைரேகை நிபுணரிடம் ஒப்படைத்தேன். என்னிடம் சீலிடப்பட்ட உரை கொடுக்கப்பட்டபோது ஏதேனும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா? என்றால் இல்லை. அவ்வாறு சீலிடப்பட்ட உரை கொடுப்பதற்கு முன்பாக நீதிமன்ற வழக்கறிஞரான தன்னிடம் மாதிரி கையொப்பம் தன்னிடம் பெறப்பட்டதாக சாட்சி கூறுகிறார். நான் நீதிமன்ற ஆணையர் வாரண்டிற்கு எதிராக ஒருதலைப்பட்சமாக செயல்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிர்மனுதாரர் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணையானது ஒத்திவைக்கப்படுகிறது.**